T.C. 169

**010/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# DEPARTMENTAL TEST FOR JUNIOR ASSISTANTS IN THE POLICE DEPARTMENT

(Without Books)

Maximum Time : 2 hours                Maximum Marks : 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Tamil Nadu Police Standing Orders contains

(A) One Volume (B) Two Volumes

(C) Three Volumes (D) Four Volumes

தமிழ்நாடு காவல் நிலை ஆணைகள் அடங்கியுள்ள தொகுதிகள் (வால்யூம்ஸ்)

(A) ஒரு தொகுதி (B) இரண்டு தொகுதிகள்

(C) மூன்று தொகுதிகள் (D) நான்கு தொகுதிகள்

2. To whom the punishment of "CENSURE" can be awarded in the departmental disciplinary action

(A) Grade II PCs (B) Grade I PCs

(C) Head Constables (D) Sub Inspectors of Police

துறையிலான ஒழுங்கு நடவடிக்கையின் போது ''கண்டனம்'' என்ற தண்டனை யாருக்கு வழங்கப்படும்

(A) இரண்டு நிலைக் காவலர்கள் (B) முதல்நிலைக் காவலர்கள்

(C) தலைமைக் காவலர்கள் (D) காவல் சார் ஆய்வாளர்கள்

3. Desertion Confirmation will be ordered when the period of unauthorized absent for duty is more than

(A) 21 days and above (B) 30 days

(C) 60 days (D) 90 days

அனுமதியின்றி பணிக்கு வராமலிருக்கும் போது விட்டோடி உறுதி செய்தல் ஆணை எத்தனை நாட்களுக்குப் பின்னர் ஆணையிடப்படும்

(A) 21 நாட்கள் (B) 30 நாட்கள்

(C) 60 நாட்கள் (D) 90 நாட்கள்

4. Who will be the punishing Authority when a Head Constable committed grave delinquency and action taken in Villuppuram district is transferred to Coimbatore District at the time of passing final order in the Punishment Roll against him

(A) S.P. Villuppuram District (B) DIG Villuppuram Range

(C) S.P. Coimbators District (D) DIG Coimbators Range

விழுப்புரம் மாவட்டத்தில் பணியாற்றிய போது கடுமையான குற்றச்சாட்டுகளுக்காக ஒரு தலைமைக்காவலர் மீது தண்டனைப்பட்டியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்பட வேண்டிய தருணத்தில் அவர் கோவை மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் போது தண்டனைப் பட்டியலில் இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டிய அதிகாரி

(A) காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம் மாவட்டம்

(B) காவல்துறைத் துணைத்தலைவர், விழுப்புரம் சரகம்

(C) காவல் கண்காணிப்பாளர், கோவை மாட்டம்

(D) காவல்துறைத் துணைத்தலைவர், கோவை சரகம்

5. Money Reward for the good work done on duty is granted to the ranks of

(A) PCs to HCs
(B) PCs to Sub Inspector of Police
(C) PCs to Inspectors of Police
(D) None of them above

நற்பணிக்கான பணவெகுமதி பின்வரும் பதிவியினர்களுக்கு வழங்கப்படும்

(A) காவலர் முதல் தலைமைக்காவலர் வரையிலானவர்களுக்கு
(B) காவலர் முதல் சார் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு
(C) காவலர் முதல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு
(D) இவர்களில் எவருமில்லை

6. Convicted prisoners are allowed to be photographed by

(A) Jailor
(B) District Police Photographer
(C) Social Welfare Dept
(D) Press Photographer

தண்டனைக் கைதிகளை புகைப்படும் எடுக்க அனுமதிக்கப்பட்டிருப்பது

(A) சிறைக் காவலர்
(B) மாவட்ட காவல் புகைப்படக்கலைஞர்
(C) சமூக நலன் துறையால்
(D) பத்திரிக்கை புகைப்படக்கலைஞர்

7. Punishment of Black Mark, unless otherwise specifically ordered, shall take effect from the

(A) Date of offence
(B) Date of order
(C) Date of receipt of order
(D) None of the above

கரும்புள்ளி தண்டனை ஆணையில், குறிப்பிட்டு ஆணையிடாத நிலையில் தண்டனைக்காலம் அமல்படுத்தப்படும் தேதி

(A) தவறிழைத்த தேதி
(B) ஆணை பிறப்பித்த தேதி
(C) ஆணையினைப் பெற்ற நாள்
(D) இவைகளில் எதுவுமில்லை

8. The time limit prescribed for preferring appeal against the punishment by subordinate police officials is

(A) 30 days
(B) 60 days
(C) 3 months
(D) 6 months

சார்நிலை காவல் பணியாளர்கள், வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேல் முறையீடு செய்ய நிர்ணயிக்கப்பட்ட காலம்

(A) 30 நாட்கள்
(B) 60 நாட்கள்
(C) 3 மாதங்கள்
(D) 6 மாதங்கள்

9. As per PSO 111, Subordinate Police Officers shall correspond with the Government

(A) Directly (B) Shall not directly

(C) Through DGP (D) Through Collector

காவல்நிலை ஆணைகள் 111–இன்படி சார்நிலை காவல் அலுவலர்கள் அரசுக்கு அனுப்பும் கடிதப்போக்குவரத்தினை

(A) நேரடியாக மேற்கொள்ளலாம்

(B) நேரடியாக மேற்கொள்ளலாகாது

(C) காவல்துறை தலைமை இயக்குநர் வழியாக மேற்கொள்ளலாம்

(D) மாவட்ட ஆட்சியர் மூலமாக மேற்கொள்ளலாம்

10. As per following PSO police force of the state is under the control of a Director General of police

(A) PSO 100 (B) PSO 1

(C) PSO 111 (D) PSO 10

கீழ்க்காணும் காவல்நிலைய ஆணையின் படி, மாநில காவல்படை காவல்துறை இயக்குநரின் கீழ் உள்ளது

(A) காவல்நிலைய ஆணை எண் 100 (B) காவல்நிலைய ஆணை எண் 1

(C) காவல்நிலைய ஆணை எண் 111 (D) காவல்நிலைய ஆணை எண் 10

11. Confidential Personal Files of Sub Inspectors are to be maintained by

(A) Superintendents of Police (B) Deputy Supdts. Of Police

(C) Range DIG of Police (D) Zone IGPs/COPs

காவல் சார் ஆய்வாளர்களின் மந்தண அறிக்கை கோப்பினை பராமரிக்க வேண்டிய அதிகாரி

(A) காவல் கண்காணிப்பாளர்

(B) துணைக்காவல் கண்காணிப்பாளர்

(C) சரக காவல்துறை துணைத்தலைவர்

(D) மண்டல காவல்துறை தலைவர்/காவல் ஆணையாளர்

12. Officer incharge of the Police Sub Divisions in the District is

(A) DSP/ASP/JSP (B) Inspector of Police

(C) Supdt. of Police (D) Commissioner of Police

காவல் உட்கோட்டத்தின் பொறுப்பு அதிகாரி

(A) துணை/உதவி/இணைக்காவல் கண்காணிப்பாளர்

(B) காவல் ஆய்வாளர்

(C) காவல் கண்காணிப்பாளர்

(D) காவல் ஆணையாளர்

13. Who has to investigate the cases registered under SC/ST (POA) Act 1988

(A) Supdt. of Police
(B) Deputy Supdt. of Police
(C) Inspector of Police
(D) Sub Inspector of Police

தாழ்த்தப்பட்டோர்/மலைச்சாதியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1988 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் புலன் விசாரணை அதிகாரி

(A) காவல் கண்காணிப்பாளர்
(B) துணைக்காவல் கண்காணிப்பாளர்
(C) காவல் ஆய்வாளர்
(D) காவல் சார் ஆய்வாளர்

14. When a subordinate police official is placed under suspension, his Sannad and kits have to be handed over at

(A) Kept by him
(B) Sub Divisional Office
(C) DPO Stores
(D) handed over at serving Police Station

காவல் சார்நிலை அலுவலர் ஒருவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டால் அவருடைய சன்னது மற்றும் உடைப்பொருட்களை ஒப்படைக்க வேண்டிய இடம்

(A) அவரே வைத்துக் கொள்ளலாம்
(B) உட்கோட்ட அலுவலகம்
(C) மாவட்ட காவல் அலுவலக பண்டகம்
(D) பணியாற்றிய காவல் நிலையம்

15. Who has to send the weekly reports in Form No. 11 to higher officers?

(A) Head Constables
(B) Sub Inspectors of Police
(C) Inspectors of Police
(D) Deputy Supdts. of Police

படிவம் எண். 11 ல் வாராந்திர அறிக்கைகளை உயர் அதிகாரிக்கு அனுப்பவேண்டிய அலுவலர்

(A) தலைமைக் காவலர்
(B) காவல் சார் ஆய்வாளர்
(C) காவல் ஆய்வாளர்
(D) காவல் துணைக் கண்காணிப்பாளர்

16. Small Service Books are maintained at

(A) District Police Office
(B) Sub Divisional Office
(C) Circle Inspector's Office
(D) Police Station

சிறுபணிப்புத்தகம் பராமரிக்கப்படும் அலுவலகம்

(A) மாவட்ட காவல் அலுவலகம்
(B) உட்கோட்ட அலுவலகம்
(C) வட்ட காவல் ஆய்வாளர் அலுவலகம்
(D) காவல் நிலையம்

17. Sub Divisional Police Officer should conduct Inspection of the Police Stations in the Sub Division

(A) Once in every Calendar year
(B) Once in Financial year
(C) Once in half year
(D) Every month

உட்கோட்ட காவல் அதிகாரி காவல் நிலையங்களை ஆய்வு செய்ய வேண்டிய கால வரையறை

(A) ஒவ்வொரு காலண்டர் ஆண்டும்
(B) ஒவ்வொரு நிதி ஆண்டும்
(C) ஒவ்வொரு அரையாண்டும்
(D) ஒவ்வொரு மாதமும்

18. Safe custody of duplicate Keys of Iron safes and Cash chests are to be kept in a sealed cover at

(A) District Police Office (B) Range Office

(C) District Treasury (D) District Collectorate

இரும்பு பாதுகாப்பு பெட்டகம் மற்றும் பணப்பெட்டிகளின் மாற்றுச் சாவிகள் முத்திரையிடப்பட்ட உறைகளில் எங்கு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் வரையறை

(A) மாவட்ட காவல் அலுவலகம் (B) சரக அலுவலகம்

(C) மாவட்ட கருவூலம் (D) மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

19. The Head of a Tamilnadu Special Police Battalion is called as

(A) Assistant Commandant (B) Deputy Commandant

(C) Commandant (D) DIG Armed Police

தமிழ்நாடு சிறப்புக்காவல் அணியின் தலைமை அதிகாரி பின்வருமாறு அழைக்கப்படுவார்

(A) உதவித் தளவாய் (B) துணைத்தளவாய்

(C) தளவாய் (D) ஆயுதப்படை காவல்துறைத் துணைத்தலைவர்

20. Who is the station house officer of a police station when an Inspector of Police working in the station?

(A) Inspector of Police (B) Sub Inspector of Police

(C) Special Sub Inspector of Police (D) Deputy Supdt. of Police

காவல் ஆய்வாளர் பணியாற்றும் காவல் நிலையத்தின் நிலைய பொறுப்பு அதிகாரி

(A) காவல் ஆய்வாளர் (B) காவல் சார் ஆய்வாளர்

(C) சிறப்புக் காவல் சார் ஆய்வாளர் (D) துணைக் காவல் கண்காணிப்பாளர்

21. Who is the Police Station incharge in the absence of the Station House Officer

(A) Station Writer

(B) Sub Inspector of Police

(C) Head Constable

(D) Senior Most official present in the station

காவல் நிலைய பொறுப்பு அதிகாரி காவல் நிலையத்தில் இல்லாத நேரங்களில் யார் நிலைய பொறுப்பு அதிகாரியாக செயல்படுவார்

(A) நிலைய எழுத்தர்

(B) காவல் சார் ஆய்வாளர்

(C) தலைமைக் காவலர்

(D) நிலையத்தில் ஆஜரில் உள்ள முதுநிலை காவல் அலுவலர்

22. Who are all empowered to register the First Information Report on receipt of complaints

(A) Gr. II PC
(B) Gr. I PC and above
(C) Head Constable
(D) Station House Officer only

புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் அதிகாரம் உள்ளவர்கள்

(A) இரண்டாம் நிலைக் காவலர்
(B) முதல்நிலைக் காவலர் மற்றும் அதற்கும் மேல் உள்ளோர்
(C) தலைமைக் காவலர்
(D) நிலைய பொறுப்பு அதிகாரி மட்டும்

23. When Off-duty to PCs to HCs to be granted

(A) One day for every calendar week
(B) Every Sunday
(C) Four days for every month
(D) None of the above

காவலர் முதல் தலைமைக் காவலர் பதவியில் உள்ளவர்களுக்கு எப்படி ஓய்வு நாள் கணக்கிடப்படுகிறது

(A) வாரத்திற்கு ஒரு நாள்
(B) ஞாயிற்றுக்கிழமை தோறும்
(C) மாதத்திற்கு நான்கு நாட்கள்
(D) இவைகளில் எதுவுமில்லை

24. Extra Time Remuneration is entitled to the Ranks of

(A) PCs to Inspectors of Police
(B) PCs to Sub Insprs of Police
(C) PCs to Head Constables
(D) PCs alone

மிகைநேரப்படி பெறத் தகுதியுள்ளோர்

(A) காவலர் முதல் ஆய்வாளர் வரை
(B) காவலர் முதல் சார் ஆய்வாளர் வரை
(C) காவலர் முதல் தலைமைக் காவலர் வரை
(D) காவலர்கள் மட்டும்

25. How many rounds of revolver ammunition is to be fired during revolver practice by Inspectors and Sub Inspectors every year

(A) 50 Rounds
(B) 60 Rounds
(C) 70 Rounds
(D) 80 Rounds

காவல் ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்களுக்கு ரிவால்வர் சுடும் பயிற்சிக்கு ஆண்டு தோறும் எத்தனை குண்டுகள் கொடுக்கப்படுகின்றன

(A) 50 குண்டுகள்
(B) 60 குண்டுகள்
(C) 70 குண்டுகள்
(D) 80 குண்டுகள்

26. The last pay of a deceased police officer or an officer quitting the service

(A) Should not be paid

(B) Should be paid

(C) Should not be paid till clearance of Govt. dues

(D) None of the above

இறந்த போன அல்லது பணியினை விட்டு அகன்ற காவல் அதிகாரியின் இறுதி ஊதியம்

(A) பட்டுவாடா செய்யக்கூடாது

(B) பட்டுவாடா செய்யலாம்

(C) அரசுக்கு செலுத்தவேண்டிய தொகைகள் செலுத்தப்படாத வரை வழங்ககூடாது

(D) இவைகளில் எதுவுமில்லை

27. Who has to check the Station Cash book everyday?

(A) Station Writer

(B) Circle Inspector of Police

(C) Station House Officer

(D) Deputy Supdt of Police

காவல் நிலைய பணப்பதிவேட்டை தினந்தோறும் யார் தணிக்கை செய்ய வேண்டும்

(A) நிலைய எழுத்தர்

(B) வட்ட காவல் ஆய்வாளர்

(C) நிலைய பொறுப்பு அதிகாரி

(D) துணைக்காவல் கண்காணிப்பாளர்

28. Who is NOT empowered to sanction Casual Leave to subordinate police officers upto the rank of Head Constables

(A) Sub Inspector of Police

(B) Inspector of Police

(C) Deputy Supdt. of Police

(D) Addl. Supdt. of Police

காவலர்கள் முதல் தலைமைக்காவலர் வரையிலானவர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்க யாருக்கு அதிகாரம் கிடையாது

(A) காவலர் சார் ஆய்வாளர்

(B) காவல் ஆய்வாளர்

(C) துணைக்காவல் கண்காணிப்பாளர்

(D) கூடுதல் காவல் கண்காணிப்பாளர்

29. As per PSO, who are all the subordinate police officials to be issued with passport for availing the leave

(A) PCs to Inspectors of Police

(B) PCs to Sub Insprs. of Police

(C) PCs to Head Constables

(D) All the Subordinate Police Officials

காவல்நிலை ஆணைகளின் படி விடுப்பில் செல்லும் போது எந்தெந்த சார்நிலை அலுவலர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்

(A) காவலர் முதல் ஆய்வாளர் வரை

(B) காவலர் முதல் சார்ஆய்வாளர் வரை

(C) காவலர் முதல் தலைமைக் காவலர் வரை

(D) அனைத்து சார்நிலை அலுவலர்கள்

30. Medical History Sheets below the rank of Sub Inspectors of Police should be maintained in Form No.42 at

(A) District Police Office
(B) Sub Divisional Office
(C) Circle Office
(D) Police station

காவல் சார் ஆய்வாளர்களுக்கும் கீழ் நிலையில் உள்ளவர்களின் மருத்துவ வரலாற்றுத் தாட்கள் படிவம் 42 ல் பாராமரிக்கப்பட வேண்டிய அலுவலகம்

(A) மாவட்ட காவல் அலுவலகம்
(B) உட்கோட்ட அலுவலகம்
(C) வட்ட அலுவலகம்
(D) காவல் நிலையம்

31. A register of Licences granted under Arms Act 1969 has to be maintained in every

(A) Sub Division Office
(B) Circle Office
(C) Police Station
(D) District Police Office

1969 ம் ஆண்டு படைக்கலச் சட்டத்தின் படி படைக்கல உரிமம் வழங்கப்பட்டவர்கள் குறித்த பதிவேடு பேணப்பட வேண்டிய அலுவலகம்

(A) உட்கோட்ட அலுவலகம்
(B) வட்ட அலுவலகம்
(C) காவல் நிலையம்
(D) மாவட்ட காவல் அலுவலகம்

32. Shops and premises licenced under the Arms and Explosives Acts should be inspected by the Sub Divisional Police Officer

(A) Every month
(B) Every quarter
(C) Every half year
(D) Every year

படைக்கலன்கள் மற்றும் வெடிபொருட்கள் உரிமம் பெற்ற கடைகள் மற்றும் வளாகங்களை உட்கோட்ட அதிகாரி ஆய்வு செய்ய வேண்டிய காலம் வரையறை

(A) மாதம் ஒரு முறை
(B) காலாண்டுக்கு ஒரு முறை
(C) அரையாண்டுக்கு ஒரு முறை
(D) ஆண்டுக்கு ஒரு முறை

33. Ordinarily the sentry duty period in the Police Station is changed

(A) every two hours
(B) every three hours
(C) every six hours
(D) every eight hours

காவல் நிலைய பாரா பணி மாற்றம் செய்யப்பட வேண்டிய கால வரையறை

(A) 2 மணி நேரத்திற்கு ஒரு முறை
(B) 3 மணி நேரத்திற்கு ஒரு முறை
(C) 6 மணி நேரத்திற்கு ஒரு முறை
(D) 8 மணி நேரத்திற்கு ஒரு முறை

34. Subordinate Police Officers shall undergo medical check up compulsorily

(A) once in six months (B) once in a year

(C) once in two years (D) once in three years

சார்நிலை காவல் அலுவலர்கள் கட்டாயமாக மருத்துவ சோதனைக்குட்படுத்தப்பட வேண்டிய கால அளவு

(A) 6 மாதத்திற்கு ஒரு முறை (B) ஆண்டுக்கொருமுறை

(C) 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை (D) 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை

35. Money Rewards are sanctioned by the Court for

(A) Detection of grave crimes

(B) Detection of murder cases

(C) Detection of gambling cases

(D) Detention of criminals under Goondas Act

நீதிமன்றத்தால் பண வெகுமதி ஒப்பளிக்கப்படுவது

(A) கடுங்குற்றங்களை கண்டு பிடித்தமைக்கு

(B) கொலைக் குற்றத்தை கண்டு பிடித்தமைக்கு

(C) சூதாட்ட வழக்குகளைக் கண்டு பிடித்தமைக்கு

(D) குற்றவாளிகளை குண்டர்கள் சட்டத்தில் சிறையில் அடைத்தமைக்கு

36. Who will be the enquiry officer when the delinquent is Inspector of Police?

(A) Another Senior Inspector of Police (B) Deputy Supdt. of Police

(C) Addl. SP/Joint Supdt. of Police/SP (D) DIG of Police

காவல் ஆய்வாளர் பிழையாளியாக இருந்தால் விசாரணை அதிகாரியாக யார் இருப்பார்

(A) மற்றொரு மூத்த காவல் ஆய்வாளர்

(B) துணைக் காவல் கண்காணிப்பாளர்

(C) கூடுதல் காவல் கண்காணிப்பாளர்/இணை காவல் கண்காணிப்பாளர் காவல் கண்காணிப்பாளர்

(D) காவல்துறை துணைத்தலைவர்

37. Charge u/r 3(b) against a Sub Inspector of Police shall be approved by the

(A) Inspector of Police (B) Deputy Supdt. of Police

(C) Supdt. of Police (D) DIG of Police

காவல் சார் ஆய்வாளருக்கு எதிரான 3 (b) விதியின் கீழான குற்றச்சாட்டு குறிப்பாணை யாரால் ஒப்பளிக்கப்பட வேண்டும்

(A) காவல் ஆய்வாளர் (B) துணைக் காவல் கண்காணிப்பாளர்

(C) காவல் கண்காணிப்பாளர் (D) காவல் துறைத்துணைத் தலைவர்

38. Who has to conduct investigation when a case of suspicious death of a woman within 7 years of her marriage is reported and registered in the station

(A) Deputy Supdt. of Police  (B) Addl. Superintendent of Police

(C) Superintendent of Police  (D) Revenue Divisional Officer

திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் சந்தேகமான முறையில் பெண் மரணம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் புலன் விசாரணை செய்ய வேண்டிய அதிகாரி

(A) துணைக் காவல் கண்காணிப்பாளர்  (B) கூடுதல் காவல் கண்காணிப்பாளர்

(C) காவல் கண்காணிப்பாளர்  (D) வருவாய் உட்கோட்ட அலுவலர்

39. Post-mortem examination certificate of the body shall be issued by the

(A) District Medical Officer

(B) Medical Officer on duty

(C) Post-mortem conducted Medical Officer

(D) Residential Medical Officer

பிரேத பரிசோதனை ஆய்வறிக்கை கொடுக்க வேண்டிய அலுவலர்

(A) மாவட்ட மருத்துவ அதிகாரி

(B) பணியில் இருந்த மருத்துவ அதிகாரி

(C) பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவ அதிகாரி

(D) இருப்பிட மருத்துவ அதிகாரி

40. First Information Report shall be registered in the Police Station in the format prescribed under Section 154 CrPC in

(A) Form No.73  (B) Form No.75

(C) Form No.90  (D) Form No.91

குவிமுச 154 ன் படி காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய அமைந்த படிவம்

(A) படிவம் எண் 73  (B) படிவம் எண் 75

(C) படிவம் எண் 90  (D) படிவம் எண் 91

41. Copy of First Information Report shall be provided to the

(A) Complainant  (B) Accused

(C) FIR Registering Official  (D) Station Writer

முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுக்கப்பட வேண்டிய நபர்

(A) புகார்தாரர்  (B) எதிரி

(C) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர்  (D) நிலைய எழுத்தர்

42. Identification parade to identify the offender by a witness shall be conducted by

(A) Jail Superintendent (B) Deputy Supdt. of Police

(C) Magistrate (D) District Sessions Judge

சாட்சியால் குற்றவாளியை அடையாளம் காண அடையாள அணி வகுப்பு நடத்த வேண்டிய அதிகாரி

(A) சிறைத்துறை கண்காணிப்பாளர் (B) துணைக்காவல் கண்காணிப்பாளர்

(C) நீதிமன்ற நடுவர் (D) மாவட்ட செஷன்ஸ் நீதிபதி

43. Copy of First Information Report of a case shall be sent to the jurisdictional Magistrate on the

(A) the same day (B) within 3 days

(C) after arrest of the accused (D) after order of the District SP

ஒரு வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவருக்கு அனுப்பப்பட வேண்டிய நாள்

(A) அன்றைய தினத்திலேயே

(B) 3 நாட்களுக்குள்

(C) எதிரியைக் கைது செய்த பின்னர்

(D) மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் ஆணைக்குப் பின்னர்

44. Under whose head the District Crime Record Bureau is functioning

(A) Inspector of Police (B) Deputy Supdt. of Police

(C) Additional Supdt. of Police (D) Joint Supdt. of Police

யாருடைய தலைமையின் கீழ் மாவட்ட குற்றப்பதிவேடு கூடம் செயல்படுகிறது?

(A) காவல் ஆய்வாளர் (B) துணைக்காவல் கண்காணிப்பாளர்

(C) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (D) இணைக்காவல் கண்காணிப்பாளர்

45. The movement and activities of all dossier criminals should be promptly report to the district Crime Record Bureau by the Police Station

(A) Sub Inspector of Police (B) Inspector of Police

(C) Station House Officer (D) Station Writer

அனைத்து (dossier) குற்றவாளிகளின் நடமாட்டம் மற்றும் நடவடிக்கைகள் குறித்து காவல் நிலையத்திலிருந்து மாவட்ட குற்றப்பதிவேடு கூடத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டிய அதிகாரி

(A) காவல் உதவி ஆய்வாளர் (B) காவல் ஆய்வாளர்

(C) நிலைய பொறுப்பு அதிகாரி (D) நிலைய எழுத்தர்

46. The consolidated monthly Crime Review details shall be prepared at

(A) Police Station (B) Sub Divisional Office

(C) District Police Office (D) Crime Record Bureau

ஒருங்கிணைந்த மாதாந்திர குற்ற ஆய்வு அறிக்கை விவரங்கள் தயார் செய்யப்படும் அலுவலகம்

(A) காவல் நிலையம் (B) உட்கோட்ட அலுவலகம்

(C) மாவட்ட காவல் அலுவலகம் (D) குற்ற பதிவேடு கூடம்

47. Arrest of an employee of foreign consulates should be reported to

(A) State Government (B) Central Government

(C) Consular Officer concerned (D) DGP of the State

அயல்நாட்டு தூதரக பணியாளர் ஒருவரை கைது செய்த விவர அறிக்கை அனுப்பவேண்டியது

(A) மாநில அரசுக்கு (B) மத்திய அரசுக்கு

(C) சம்பந்தப்பட்ட தூதரகத்திற்கு (D) காவல்துறை தலைமை இயக்குநருக்கு

48. While arresting a person in a case, which court rulings should be followed

(A) Chief Judicial Magistrate Court (B) District Sessions Court

(C) High Court (D) Supreme Court

ஒருவரை கைது செய்யும் போது எந்த நீதிமன்ற வரைமுறை ஆணைகளை பின்பற்ற வேண்டும்

(A) தலைமை நடுவர் நீதிமன்றம் (B) மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்

(C) உயர்நீதிமன்றம் (D) உச்ச நீதிமன்றம்

49. How the District Armed Reserve police personnel are divided into

(A) Companies (B) Sections

(C) Platoons (D) None of the above

மாவட்ட ஆயுதப்படை ஆளினர்கள் எவ்வாறு பிரிக்கப்படுகின்றனர்

(A) நிறுமங்களாக (B) பிரிவுகளாக

(C) முப்பிரிவுகளாக (பிளட்டூன்களாக) (D) இவைகளில் எதுவுமில்லை

50. Tamilnadu Special Police personnel are divided into

(A) Companies (B) Sections

(C) Platoons (D) None of the above

தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி ஆளினர்கள் எவ்வாறு பிரிக்கப்படுகின்றனர்

(A) நிறுமங்களாக (B) பிரிவுகளாக

(C) முப்பிரிவுகளாக (பிளட்டூன்களாக) (D) இவைகளில் எதுவுமில்லை

51. History Sheets for the habitual offenders are maintained at

(A) Police Stations (B) Crime Record Bureau

(C) Sub Divisional Office (D) District Police Office

தொடர் குற்றவாளிகளின் வரலாற்றுத் தாள்கள் பராமரிக்கப்படும் இடம்

(A) காவல் நிலையங்கள் (B) குற்ற பதிவேடு கூடம்

(C) உட்கோட்ட அலுவலகம் (D) மாவட்ட காவல் அலுவலகம்

52. Police Personnel on Bandobust duties outside the district shall be paid

(A) Travelling Allowance and Feeding charges

(B) Extra Time Remuneration

(C) Extra Time Remuneration and T.A.

(D) Either TA or Feeding charges

வெளி மாவட்டங்களுக்கு பாதுகாப்பு பணிக்காகச் செல்லும் காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்படுவது

(A) பயணப்படியும் உணவுப்படியும்

(B) மிகை நேர ஊதியம்

(C) மிகை நேர ஊதியமும் பயணப்படியும்

(D) பயணப்படி அல்லது மிகைநேர ஊதியம் ஏதாவது ஒன்று

53. Extra Time Remuneration shall be sanctioned and paid by

(A) Superintendent of Police (B) Deputy Supdt. of Police

(C) Administrative Officer (D) Inspector of Police

மிகைநேர ஊதியம் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரி

(A) காவல் கண்காணிப்பாளர் (B) துணைக் காவல் கண்காணிப்பாளர்

(C) நிர்வாக அதிகாரி (D) காவல் ஆய்வாளர்

54. Part-IV of the Police station record contains

(A) History sheets of the offenders (B) Police station History

(C) Year War case details (D) Police Officials nominal roll

காவல்நிலைய ஆவணம் பகுதி–4 ல் உள்ள விவரங்கள்

(A) குற்றவாளிகளின் வரலாற்றுத் தாள்கள் (B) காவல் நிலைய வரலாறு

(C) ஆண்டு வாரியான வழக்கு விவரங்கள் (D) காவல் அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்

55. The case diaries relating the investigation of a case in the Police station should be written in the prescribed format by

(A) Station Writer (B) Investigating Officer

(C) Sub Inspector of Police (D) Inspector of Police

காவல் நிலைய வழக்குகளின் புலன் விசாரணை விவரங்களை அமை படிவ வழக்கு நாட்குறிப்புகளை எழுத வேண்டியவர்

(A) நிலைய எழுத்தர் (B) புலன் விசாரணை அலுவலர்

(C) காவல் சார் ஆய்வாளர் (D) காவல ஆய்வாளர்

56. Entries in the General Diary of the Police station contain

(A) Time to time occurrences in the station

(B) Pending investigation cases

(C) Bandobust duties alone

(D) None of the above

காவல் நிலைய பொது நாட்குறிப்புகளில் உள்ள பதிவுகளின் விவரங்கள்

(A) அவ்வப்போது காவல் நிலைய நிகழ்வுகள்

(B) நிலுவையில் உள்ள புலன் விசாரணை வழக்குகள்

(C) பாதுகாப்புப் பணி விவரங்கள் மட்டும்

(D) இவைகளில் எதுவுமில்லை

57. Closure of the History Sheets of the criminals shall be done as per the order of

(A) DIG of Police

(B) Supdt. of Police

(C) Deputy Supdt. of Police

(D) Inspector of Police

குற்றவாளிகளின் வரலாற்றுத் தாள்களை முடிக்குமாறு ஆணை பிறப்பிக்க வேண்டிய அதிகாரி

(A) காவல்துறைத் துணைத்தலைவர்

(B) காவல் கண்காணிப்பாளர்

(C) துணைக் காவல் கண்காணிப்பாளர்

(D) காவல் ஆய்வாளர்

58. Enquiry under PSO 151 (Old No. 145) has to be conducted by the

(A) Supdt. of Police

(B) Deputy Supdt of Police

(C) Sub Divisional Magistrate

(D) Collector

காவல் நிலை ஆணை எண். 151 (பழைய ஆணை எண். 145) ன் கீழ் விசாரணை நடத்த மேற்கொள்ள வேண்டிய அதிகாரி

(A) காவல் கண்காணிப்பாளர்

(B) துணைக் காவல் கண்காணிப்பாளர்

(C) உட்கோட்ட நடுவர்

(D) மாவட்ட ஆட்சியர்

59. Which is the PSO No. stipulate "Night Rounds by Officers"

(A) PSO 834

(B) PSO 835

(C) PSO 836

(D) PSO 837

இரவு ரோந்து அதிகாரிகளின் பணி குறித்து எந்த காவல் நிலை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது

(A) கா.நி.ஆ. 834

(B) கா.நி.ஆ.835

(C) கா.நி.ஆ.836

(D) கா.நி.ஆ.837

60. Duties of the Station Writer is stipulated in

(A) PSO 821 (B) PSO 831

(C) PSO 841 (D) PSO 851

நிலைய எழுத்தரின் பணிகள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ள காவல் நிலை ஆணை

(A) கா.நி.ஆ.821 (B) கா.நி.ஆ.831

(C) கா.நி.ஆ.841 (D) கா.நி.ஆ.851

61. Whenever a Constable, Head Constable or Sub Inspector proceed on leave other than Casual Leave, the Station House Officer should send the report to District Police Office as per PSO 729 in

(A) Form No. 34 (B) Form No. 44

(C) Form No. 54 (D) Form No. 64

ஒரு காவலர் அல்லது தலைமைக்காவலர் அல்லது காவல் சார் ஆய்வாளர் தற்செயல் விடுப்பு தவிர இதர விடுப்பில் செல்லும் போது காவல் நிலை ஆணை எண். 729 ன் படி மாவட்ட காவல் அலுவலகத்திற்கு நிலைய பொறுப்பு அதிகாரி அறிக்கை அனுப்ப வேண்டிய படிவம்

(A) படிவம் எண்.34 (B) படிவம் எண். 44

(C) படிவம் எண்.54 (D) படிவம் எண்.64

62. Process Register of the Station should be compared with that of registers maintained in the Magistrate's Court at least

(A) Once in two months (B) Once in a quarter

(C) Once in half year (D) Every month

நீதிமன்ற அழைப்பாணை குறித்த விவரங்கள் தொடர்பாக காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டினை (process) நீதிமன்ற பதிவேடுகளுடன் எந்த காலத்திற்குள் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்

(A) 2 மாதத்திற்கு ஒரு முறை (B) காலாண்டுக்கு ஒரு முறை

(C) அரையாண்டுக்கு ஒரு முறை (D) பிரதி மாதம்

63. Maintenance of the Note Books of the Constables/Head Constables of the station shall be

(A) Station Writer (B) Station House Officer

(C) Station Sentry (D) Inspector of Police

காவலர்கள்/தலைமைக் காவலர்களின் நோட்டுப் புத்தகங்களை காவல் நிலையத்தில் பராமரிக்க வேண்டியவர்

(A) நிலைய எழுத்தர் (B) நிலைய பொறுப்பு அதிகாரி

(C) நிலைய பாரா காவலர் (D) காவல் ஆய்வாளர்

64. Order for prosecuting the offender under Section 25 of Arms Act has to be obtained by the Station House Officer from

(A) Superintendent of Police (B) Collector

(C) DIG of Police (D) Revenue Divisional Officer

படைக்கலச் சட்டம் பிரிவு 25 ன் படி குற்றவாளி மீது குற்ற நடவடிக்கை எடுக்க நிலைய பொறுப்பு அதிகாரி யாரிடமிருந்து ஆணை பெற வேண்டும்

(A) காவல் கண்காணிப்பாளர் (B) மாவட்ட ஆட்சியர்

(C) காவல்துறை துணைத்தலைவர் (D) வருவாய் உட்கோட்ட அதிகாரி

65. Who is empowered to grant bail in the Police Station

(A) Sub Divisional Police Officer (B) Circle Inspector of Police

(C) Sub Inspector of Police (D) Station House Officer

பிணையில் விடுவிக்க அதிகாரம் பெற்றவர்

(A) உட்கோட்ட காவல் அதிகாரி (B) வட்ட காவல் ஆய்வாளர்

(C) காவல் சார் ஆய்வாளர் (D) நிலைய பொறுப்பு அதிகாரி

66. Arrest of Military personnel should be reported to the commanding Officer of the respective Unit within

(A) 24 hours (B) 48 hours

(C) 7 days (D) 15 days

ராணுவத்தினரை கைது செய்யும் போது சம்பந்தப்பட்ட பிரிவின் ராணுவ கமாண்டிங் அதிகாரிக்கு அறிக்கை அனுப்ப வேண்டிய கால அளவு

(A) 24 மணி நேரத்திற்குள் (B) 48 மணி நேரத்திற்குள்

(C) 7 நாட்களுக்குள் (D) 15 நாட்களுக்குள்

67. Annual mobilization of Armed Reserve is held as per the order of the Commissioner of Police/superintendent of Police once in

(A) Three months (B) Six months

(C) Once in a year (D) Two years

காவல் ஆணையாளர்/காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின் ஆணையின் படி ஆயுதப்படையினரின் வருடாந்திர மொபிலிசேஷன் நடத்தப்பட வேண்டிய கால வரையறை

(A) 3 மாதத்திற்கு ஒருமுறை (B) 6 மாதங்களுக்கு ஒரு முறை

(C) ஆண்டுக்கு ஒரு முறை (D) 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை

68. The Platoon Commander in the District Armed Reserve is

(A) Reserve Inspector of Police

(B) Reserve Sub Inspr. of Police

(C) Platoon Writer

(D) Senior Head Constable

மாவட்ட ஆயுதப்படையின் முப்பிரிவு (பிளட்டூன்) தலைவர்

(A) ஆயுதப்படை காவல் ஆய்வாளர்

(B) ஆயுதப்படை சார் ஆய்வாளர்

(C) முப்பிரிவு எழுத்தர்

(D) மூத்த தலைமைக் காவலர்

69. Head Constables/Grade I Police Constables attending the duties as Treasury Orderly in CPO/DPO should be changed once in

(A) Two years (B) One year

(C) Six months (D) Three months

மாநகர/மாவட்ட காவல் அலுவலகத்தில் கருவூல ஏவலாளராக பணியாற்றும் மு.நி.கா./தா.கா ஆகியோர் ——————— ஒரு முறை மாற்றம் செய்ய வேண்டும்

(A) 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை (B) ஆண்டுக்கு ஒரு முறை

(C) 6 மாதங்களுக்கு ஒரு முறை (D) 3 மாதங்களுக்கு ஒரு முறை

70. What is the scale of Police guard to be deputed for escorting more than Six and less than Ten High Risk Prisoners

(A) 16 Constables

(B) 10 Constables

(C) 2 Head Constables and 8 Police Constables

(D) 2 S.Is and 8 P.Cs

மிக ஆபத்தான சிறைவாசிகள் 6 நபர்களுக்கும் மேல் 10 நபர்களுக்குள் உள்ள மிக ஆபத்தான சிறைவாசிகளின் வழிக்காவல் பாதுகாப்பு பணிக்காக அனுப்பப்பட வேண்டிய பாதுகாவலர்களின் எண்ணிக்கை அளவு

(A) 16 காவலர்கள்

(B) 10 காவலர்கள்

(C) 2 தலைமைக் காவலர்கள் மற்றும் 8 காவலர்கள்

(D) 2 சார் ஆய்வாளர்கள் மற்றும் 8 காவலர்கள்

71. The movement of KD and Suspect whose names are entered in the VAO's Register shall be reported by the VAO to

(A) The Tahsildar (B) The Collector

(C) The Police Station (D) District S.P.

கிராம நிர்வாக அலுவலரின் பதிவேடுகளின் பதிவு செய்யப்பட்டுள்ள கேடிகள் மற்றும் சந்தேக நபர்களின் பெயர் விவரங்களை கிராம நிர்வாக அதிகாரியால் தெரிவிக்கப்பட வேண்டிய அதிகாரி

(A) வட்டாட்சியர் (B) மாவட்ட ஆட்சியர்

(C) காவல் நிலையம் (D) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

72. The Criminal Investigation Department is divided into which two branches mentioned below as per PSO 493?

(A) Law and Order and Crime

(B) Law and Order and Intelligence

(C) Intelligence and Crime

(D) Law and Order and Traffic

காவல் நிலை ஆணை 493 ன் படி குற்றப் புலனாய்வுத் துறை பின்வரும் எந்த இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது

(A) சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றம்

(B) சட்டம் ஒழுங்கு மற்றும் நுண்ணறிவு

(C) நுண்ணறிவு மற்றும் குற்றம்

(D) சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து

73. PSO 218 defines about

(A) Circle Information (B) Police Station Information

(C) Travelling Diary (D) General Diary

காவல் நிலை ஆணை 218 ல் விளக்கப்பட்டுள்ளது எதைப் பற்றி

(A) வட்ட தகவல் (B) காவல் நிலைய தகவல்

(C) பயணக் குறிப்பு (D) பொதுநாட்குறிப்பு

74. The evidence marked by the prosecution witness during oral enquiry will be named as

(A) Public Document (B) Prosecution Document

(C) Defence Document (D) Minute

வாய்மொழி விசாரணையின் போது அரசுத்தரப்பு சாட்சியால் தாக்கல் செய்யப்படும் ஆதாரம் எவ்வாறு பெயரிடப்படுகிறது

(A) பொது ஆவணம் (B) அரசுத்தரப்பு ஆவணம்

(C) எதிர்த்தரப்பு ஆவணம் (D) நிகழ்ச்சிப் பதிவு

75. Meritorious Service Entries are awarded to

(A) Inspector of Police (B) Deputy Supdt. of Police

(C) Superintendent of Police (D) PC to Sub Insepctor of Police

மிகச்சிறப்பான பணிப் பதிவுகள் பின்வரும் எவருக்கு வழங்கப்படுகிறது

(A) காவல் ஆய்வாளர் (B) துணைக்காவல் கண்காணிப்பாளர்

(C) காவல் கண்காணிப்பாளர் (D) காவலர் முதல் சார் ஆய்வாளர் வரை

76. On completion of investigation the forged currency notes shall be sent to

(A) Govt. Press, Nasik

(B) Treasury for safe custody

(C) Circle Currency Officer for destruction

(D) Reserve Bank of India

புலன் விசாரணை முடிவுற்ற பின்னர் கள்ள ரூபாய் நோட்டுக்கள் பின்வரும் எவ்விடத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(A) அரசு அச்சகம், நாசிக்

(B) கருவூலம்–பாதுகாப்பாக வைக்க

(C) வட்ட கரன்சி அலுவலர்–அழிப்பதற்காக

(D) இந்திய ரிசர்வ் வங்கி

77. Which PSO defines about the usage and maintenance of Motor Cycles and other transport facilities provided to the Police Stations

(A) PSO 218

(B) PSO 228

(C) PSO 238

(D) PSO 248

காவல்நிலைய பணிப்பயன்பாட்டிற்காக மோட்டார் சைக்கிள் மற்றும் இதர வாகன வசதிகள் வழங்குவது குறித்து பின்வரும் எந்த காவல் நிலை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது

(A) காவல் நிலை ஆணை எண் 218

(B) காவல் நிலை ஆணை எண் 228

(C) காவல் நிலை ஆணை எண் 238

(D) காவல் நிலை ஆணை எண் 248

78. Who will make authorized entries in the small service books of the subordinates

(A) Station Writers

(B) Head Constables

(C) Sub Inspectors and Inspectors

(D) Deputy Supdts. of Police

காவல் சார்நிலை பணியாளர்களின் சிறுபணிப்பதிவேடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பதிவுகளைச் செய்ய பின்வரும் யார் அதிகாரம் கொண்டவர்

(A) நிலைய எழுத்தர்கள்

(B) தலைமைக் காவலர்கள்

(C) காவல் சார் ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள்

(D) துணைக் காவல் கண்காணிப்பாளர்கள்

79. What are the entries made in the Defaulter sheets maintained in the Police Stations?

(A) Medical check up details

(B) Personal information

(C) Details of Rewards

(D) Details of punishments

காவல் நிலையங்களில் பராமரிக்கப்படும் ஆளிநர்களின் பிழைத்தாள்களில் பின்வரும் எந்த விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன

(A) மருத்துவ பரிசோதனைகள்

(B) ஆளிநர்களின் தனி விவரங்கள்

(C) வெகுமதி விவரங்கள்

(D) தண்டனை விவரங்கள்

80. Rules for disposal of confiscated Arms and Ammunitions are defined in

(A) PSO 323

(B) PSO 324

(C) PSO 325

(D) PSO 326

பறிமுதல் செய்யப்பட்ட படைக்கலன்கள் மற்றும் படைக்கல குண்டுகள் ஆகியனவற்றை முடிவு செய்தல் தொடர்பான விதிமுறைகள் பின்வரும் எந்த காவல் நிலை ஆணையில் வரையறுக்கப்பட்டுள்ளது

(A) காவல் நிலை ஆணை எண் 323

(B) காவல் நிலை ஆணை எண் 324

(C) காவல் நிலை ஆணை எண் 325

(D) காவல் நிலை ஆணை எண் 326

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR JUNIOR ASSISTANTS IN THE POLICE DEPARTMENT

(With Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Describe the duties of Inspectors of Police, Law and Order and indicate the relevant PSO No.

   சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளரின் பணிகள் என்னென்ன? தொடர்புடைய காவல் நிலைய ஆணை எண்ணைக் குறிப்பிட்டு விவரிக்கவும்.

2. What are all the Records to be maintained in the District Crime Record Bureau?

   மாவட்ட குற்றப்பதிவேடுகள் கூடத்தில் பராமரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

[Turn over

3. What are the purposes for sending beat constables? Indicate the PSO No.

ரோந்து பணிக்கு அனுப்பப்படும் காவலர்களின் பணியினை விவரிக்கவும். தொடர்புடைய காவல்நிலை ஆணை எண்ணைக் குறிப்பிடவும்.

4. Describe about award of Deferred Punishments indicating the PSO No.

ஒத்தி வைப்பு தண்டனைகள் வழங்குவது குறித்து விவரிக்கப்பட்டுள்ள காவல்நிலை ஆணை எண்ணைக் குறிப்பிட்டு அத்தண்டனை வழங்குவது குறித்த விவரங்களைத் தெரிவிக்கவும்.

5. Describe about discharge certificate indicating the relevant PSO No.

விடுவிப்புச் சான்றிதழ் குறித்து விவரிக்கவும், தொடர்புடைய காவல் நிலை ஆணை எண்ணைக் குறிப்பிடவும்.

6. Write about conduct of the search indicating PSO No.

சோதனை நடத்துதல் பற்றி எழுதவும். தொடர்புடைய காவல் நிலை ஆணை எண்ணைக் குறிப்பிடவும்.